# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

## அசல் வழக்கு எண்.130/2016

2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 22 நாள் செவ்வாய்கிழமை வாதி -1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.ஜெ.நாகலட்சுமி (எ) விஜயராணி பி.ஏ.பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சாமியாத்தாள் | தொழில் | விவசாயம் |
| த.க.பெ | மாரிமுத்து | ஊர் | பாப்பினி |
| வயது | 70 | தாலுாக்கா | காங்கயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

**22.11.2022 – வா.சா.-1, 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்தானது பாப்பினி கிராமம் க.ச.எண்.333/பி-ல் பு.ஏ.1.41 மற்றும் க.ச.333/சி-ல் பு.ஏ.1.26 ஆக மொத்தம் பு.ஏ.3.17 கொண்டது என்றால் சரிதான். மேற்படி பு.ஏ.3.17ல் பு.ஏ.1.05 ஐ தான் பாகப்பிரிவினை கோரியுள்ளேன் என்றால் சரிதான். க.ச.334ல் மொத்த விஸ்தீரணம் பு.ஏ.3.35 ஏக்கர் அதில் 1.13ஐ பொறுத்து மட்டும் பாகப்பிரிவினை கோரியுள்ளேன் என்றால் சரிதான். க.ச.333/பி மற்றும் சி-ல் பு.ஏ.3.17 மற்றும் க.ச.334ல் பு.ஏ.3.35 பூமியும் கருப்பநாடார், முத்தப்பநாடார், கிட்டப்பநாடார் என்கின்ற காட்டப்பன் ஆகியோர்களுக்கு பூர்வீக வகையில் பொதுவில் பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பாப்பினி கிராமம் பட்டாப்படி (பட்டா எண். 1507, 1508)படி மேற்படி மூவருக்கும் பாத்தியப்பட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

மேற்சொன்ன பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருப்பணநாடாரின் மனைவி இறந்து விட்டார் என்றால் சரிதான். கருப்பணநாடாருக்கு பெரியபழனியப்பநாடார்,

சின்னபழனியப்பநாடார் என்ற இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான். முத்தப்பநாடாரின் மனைவி பெயர் பெரியம்மாள் என்றால் சரிதான். பெரியம்மாள் இறந்து விட்டார் . முத்தப்பநாடாரும் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். முத்தப்பநாடாருக்கு சின்னபழனி என்ற மகன் இருந்து இறந்து போய் விட்டார் என்றால் சரிதான். சின்னப்பழனியின் மனைவி தான் 1 ம்பிரதிவாதி என்றால் சரிதான். பெரியம்மாள் மற்றும் சின்னப்பழனிக்கு உத்தமி, புஷ்பா என்ற இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான். மேற்படி உத்தமி மற்றும் புஷ்பா ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கானது உரிய தரப்பினர்களை சேர்க்காததால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. அதேபோல் பெரியபழனியப்பநாடார், சின்னபழனியப்பநாடார் ஆகியோர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். கிட்டப்பநாடார் (எ) காட்டப்பனுக்கு குப்புச்சாமி என்ற குப்பணன், செல்லப்பன் ஆகிய இரண்டு வாரிசுகள் என்றால் சரிதான். செல்லப்பன் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். செல்லப்பனின் மனைவி மாரியம்மாள் உயிருடன் உள்ளார் என்றால் சரிதான். கிட்டப்பன்(எ) காட்டப்பனின் மனைவி உயிருடன்இல்லை என்றால் சரிதான். குப்புச்சாமி (எ) குப்பணன் மற்றும் மாரியம்மாளை வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. கிட்டப்பநாடார் மற்றும் கருப்பநாடாரின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்காததால் இந்த வழக்கானது பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. க.ச.333 பி,சி -ல் பு.ஏ.3.17 விஸ்தீரணமுள்ள பூமியில் பு.ஏ.1.05 பூமியை பொறுத்து மட்டும பாகப்பிரிவினை கோரியுள்ள நிலையில் வழக்கானது பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.334 ல் பு.ஏ.3.35 விஸ்தீரணமுள்ள பூமியில் பு.ஏ.1.13 பூமியை பொறுத்து மட்டுமே பாகப்பிரிவினை கோரியுள்ள

நிலையிலும் வழக்கானது பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தாவா சொத்து விபரம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து பைசூல் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். பைசூல்படி பாகம் எதுவும் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். கருப்பநாடார், கிட்டப்பநாடார் முத்தப்பநாடார் ஆகியோர்கள் பைசூல்படி பாகங்களை பிரித்து பூமியை ஓட்டவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து விபரங்கள் 10.11.1999 ல் கருப்பநாடாரின் வாரிசுகளும் முத்தப்பநாடாரின் வாரிசான 1 ம் பிரதிவாதியும் கிட்டப்பநாடாரின் வாரிசுகளும் பாகப்பிரிவினை செய்து கொண்டதில் பாகப்பிரிவினையில் 1 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சி செட்யூல் சொத்து விபரத்தையே வழக்குரை சொத்துவிபரமாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

5. நான் முத்தப்பநாடாரின் மகள் என்பதை காட்ட ஆவணங்கள் என் வசம் உள்ளது. அந்த ஆவணத்தை இதுநாள் வரையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கருப்பநாடார், கிட்டப்பநாடார் முத்தப்பநாடார் 1956 க்கு முன்னரே இறந்து விட்டனர் என்றால் சரிதான். நானும், செல்லம்மாளும் முத்தப்பநாடாரின் வாரிசுகள் அல்ல என்றால் சரியல்ல. (நான் வாரிசு என்று சாட்சி அறுதியிட்டு சாட்சியம் அளிக்கிறார்). 10.11.1999 ம் தேதியில் கருப்பநாடார், கிட்டப்பநாடார், முத்தப்பநாடார் ஆகியோர்கள் சேர்ந்து செய்து கொண்ட பாகப்பிரிவினையின் அடிப்படையில் சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். அதேபோல் எங்களது சொத்தை நாங்களும் அனுபவித்து வருகிறோம்.

6. மேற்படி சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதற்கு கிஸ்து இரசீது பட்டா போன்ற ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவில் தான் அனுபவித்து வருகிறோம். தாவா சொத்து

சம்மந்தமாக வருவாய்துறை அல்லது பதிவு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10.11.1999 ம் தேதியில் பாகபிரிவினை செய்தது பற்றி எனக்கு முதலில் தெரியாது பின்னிட்டு ஒருவாரத்தில் தெரிந்து கொண்டேன். 10.11.1999 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை செல்லாது என்று இந்த வழக்கில்பரிகாரம் கோரவில்லை என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி பாகப்பிரிவினையின் படி அவரது சொத்தில் சோளம் பயிர் செய்து அறுவடை செய்தார் என்றால் சரிதான். அதனால் தான் நான் சுவாதீனம் கோரி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பு 09.01.2020 ல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். <u>**09.01.2020 வழக்கறிஞர் அறிவிப்பு நகல் பி.வா.சா.ஆ.1.**</u> அதற்கு 1 ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அவ்வாறு 13.01.2020 ம் தேதியில் பதில் அறிவிப்பு அனுப்பியதை வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். <u>**13.01.2020 ம் தேதியில் 1 ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு பி.சா.ஆ.2**</u> .

7. நான் முத்தப்பநாடாரின் வாரிசு அல்ல என்றாலும் தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றாலும் அதனால் நான் கட்டியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்றாலும் சரியல்ல. வழக்குரையில் முத்தப்பநாடாரின் மகனை சின்னப்பழனி என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பழனியப்பன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்று சாட்சி கூறுகிறார். முத்தப்பநாடாருக்கு பழனியப்பன் என்ற மகன் இருந்ததை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பழனியப்பனுக்கு சின்னபழனி என்ற பெயரும் உண்டு. மேற்சொன்ன பெயரை குறிப்பிட்டு வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. சின்னப்பழனி இறந்த தேதி எனக்கு தெரியாது. தாவா சொத்தான 333 பி,சி-ல் மொத்த விஸ்தீரணம் பு.ஏ.3.30 என்று கூறி மற்றொரு

சாமியாத்தாள் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். (மேற்படி சாமியாத்தாள் சாட்சியின் சித்தப்பா மகள் என்று கூறுகிறார்) மேற்படி வழக்கில் 12.08.2003 ல் தீர்ப்பானது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். இந்நீதிமன்ற அ.வ.எண்.206/2002 வழக்கை சாமியாத்தாள் தாக்கல் செய்த விபரம் தாவா தொடரப்பட்ட தேதியிலேயே எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதில் தீர்ப்பான விபரமும், பாகம் பிரிக்கப்பட்ட விபரமும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் என்னை தரப்பினராக சேர்க்க கோரி நடவடிக்கை எடுக்கவில்லை என்றால்சரிதான். அது எனது சித்தப்பாவின் சொத்து சம்மந்தப்பட்டது என்பதால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அ.வ.எண்.206/2002 வழக்கில் தாவா சொத்துக்கள் எனக்கோ அல்லது 1ம் பிரதிவாதிக்கோ தனிப்பட்ட முறையில் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு இருக்கும் நிலையில் தாவா சொத்தை பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்யஇயலாது என்றால் சரியல்ல. க.ச.333/பி,சி- காலையைப் பொறுத்து ஏற்கனவே அ.வ.எண்.206/2002 ஐ பொறுத்து வழக்கு முடிவுற்ற நிலையில் அதே சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கு தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

9. கிட்டப்பநாடாரின் வாரிசுகளான குப்பணன் (எ) குப்புச்சாமி, மாரியம்மாள் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.110/2008 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கானது அ.வ.எண்.206/2002 க்கு பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்டதால் அ.வ.எண்.110/2008 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த விபரங்கள் வா.சா.ஆ.7 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ஆவணத்தில் கருப்பணநாடாரின் வாரிசுகள் இருவரும் சேர்ந்து கிட்டப்பநாடார் மற்றும் அவரது வாரிசுகளிடம் தாவா சொத்தில் அவர்களுக்கு பாத்தியப்பட்ட க.ச.334 ல் 1/3 பாகத்தை பொறுத்து

கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்குரையில் சொல்லப்படாத சங்கதிகளை முதல் விசாரணை சாட்சிய பிரமாண பாரா நெம்பர் 7ல் சொல்லியுள்ளதால் அதனை ஏற்க இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து 10.11.1999ம் தேதியிலேயே தரப்பினர்களுக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் கோர இயலாது என்றால் சரியல்ல. நான் முத்தப்பநாடாரின் வாரிசாக இருந்திருந்தால் முன்னர் ஏற்பட்ட பாகப்பிரிவினையை ஆட்சேபணை செய்திருப்பேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்தவித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குரையில் காட்டப்பட்டுள்ள தாவா சொத்து நிலையில் உள்ளதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு முதல் நிலையிலேயே தள்ளுபடியாக வேண்டியது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

/ஒம்/திருமதி.ஜெ.நாகலட்சுமி (எ) விஜயராணி பி.ஏ.பி.எல்

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்